1992 மே 5]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அரசு, கட்டித் தருவதற்கு ஆவன செய்யும்.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு விட்டதா? இந்த நிதியாண்டிலேயே சத்துணவுக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி பேரூராட்சி, ஏழாவது வார்டு, கள்ளிக்காட்டு காலனிக்கு 1992-93 நிதியாண்டில் புதியக் கட்டிடம் கட்டுவதற்குரிய ஆய்வுகளைச் செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 678. திரு. எம். பெரியவீரன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

சத்துணவுக் கூடங்கள் புதுப்பித்தல்

678

*8835—திரு. எம். பெரியவீரன் :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) பெரியகுளம் தொகுதி முதல்வர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் நடைபெறும் கட்டிடங்கள் புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தொண்டுள்ளம் படைத்த தொழில் அதிபர்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் சத்துணவு மையக் கட்டிடங்களைப் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றது. 1992-93 ஆம் ஆண்டில், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கோடி ரூபாய் நிதியை, மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆகவே, மாநிலத்தில் இருக்கிற அனைத்து மையங்களிலும், தேவையைக் கருத்தில் கொண்டு, இயன்ற அளவுக்கு பெரியகுளம் தொகுதியில் உள்ள சத்துணவு மையக் கட்டிடங்களைப் புதுப்பிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் தொகுதியில் இரண்டு யூனியன்கள் உள்ளன. அந்த இரண்டு யூனியன்களிலும் எத்தனை சத்துணவுக் கூடங்கள் உள்ளன? எந்தெந்தக் கூடங்களில் பணிசெய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு யூனியன் களிலும் எந்த அளவிற்கு சத்துணவுக் கூடங்கள் பழுது பட்டிருக்கின்றன என்கிற குறிப்பினை, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்பு குறிப்புகள்

(அ) சென்னை-விழுப்புரம் சாலையில் மதுராந்தகம் அருகே கடுமையான விபத்து ஏற்பட்டுள்ளது குறித்தும் அந்த சாலையில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை-விழுப்புரம் சாலையில், மதுராந்தகம் அருகே அடிக்கடி பஸ் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும், அந்த விபத்துக்கள் குறித்தும் குறிப் பாக நேற்றையதினம் ஒரு மிகக் கடுமையான விபத்து ஏற்பட் டுள்ளது என்பது குறித்தும், அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று கோரியுள்ளார்கள் (குறுக்கீடு).

திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸீரோ ஹவர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்; ஸீரோ ஹவர்தான் ; உங்களுக்கு முன்னர் கொடுத்தது இது. திரு. ஆர். சிங்காரம் மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அப் பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினையை, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கேட்டுக்கொள்கிறேன். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்து, ஒருவர் இறந்து வேனிலே கொண்டு வருகிறபோது, லாரிக்கும்—வேனுக்கும் ஏற்பட்ட மோதலில்